DR. H. V. HANDE: Sir, in view of the fact that we are not able to have enough traffic in Madras Port, will it not be possible for the State Government to stress upon the Central Government and see to it that not only Nagapattinam, but certain other small ports which are on the coast line could be activised? The Hon. Minister also assured about Cuddalore sometime ago that it would be activised. Can Government do that so that there can fair distribution throughout the coast line ?

THE HON. THIRU Si. Pa. ADITHANAR: Sir, the Nagapattinam port is not having enough traffic. That is the point I answered. The Cuddalore Port has been improved at a cost of Rs. 1.75 crores and also the Tuticorin port is being improved as a major port at a cost of Rs. 23 crores.

* 204 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon the Minister for Co-operation be pleased to state :

(a) whether there is any proposal under the consideration of the Government to develop Colachel Port in Nagercoil; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ): கொளச்சலில் ரூ. 53,000 செலவில் கடலோரச் சாலை அமைக்கப்பட்டு முடிந்திருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 20 லட்சம் செலவில் ஒரு ஜெட்டி அதாவது பாலம் அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. நாகர்கோவிலைப் பொறுத்தவரையில் அங்கு துறைமுகத்தை மேம்படுத்தும் பிரச்சனை எழவில்லை. ஏனென்றால் அங்கு துறைமுகமே இல்லை.

திரு. என். கே. பழனிசாமி: நாகர்கோவிலில் உள்ள கொளச்சல், அதுதான் கேள்வி. நாகர்கோவிலில் எப்படி துறைமுகம் இருக்கமுடியும்? மீன்பிடி துறைமுகமாக இருப்பதை இன்னும் அதிகப்படியாக செலவு செய்து பெரிய துறைமுகமாக ஏற்படுத்த முயற்சி செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நாகர்கோவில், கொளச்சல் என்று எழுதியிருக்கிறார்கள், இரண்டையும் பற்றி. நாகர்கோவில் பற்றி இயலாது என்று சொன்னேன். கொளச்சல் பற்றி ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இருபது லட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலம் அமைக்கவேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொன்னேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, the Hon. Minister has stated that a sum of Rs. 20 lakhs has been ear-marked for building a boat-jetty. Will the boat-jetty materialise within the financial year and whether any hydrographic survey has been taken before this boat-jetty was contemplated and if so the details thereof?

THE HON. THIRU Si. Pa. ADITHANAR : Sir, I relied that a sum of Rs. 20 lakhs had been recommended to be included in the Fifth Five-Year Plan for the construction of the jetty. I did not say that a sum of Rs. 20 lakhs had been ear-marked. The recommendation has been made after due investigation.

திரு. இரா. இராமலிங்கம் : கொளச்சல் துறைமுகம் எல்லாப் பருவ காலங்களிலும் செயல்படமுடியாது என்று கூறுகிறார்களே, அது உண்மையா? அதை அபிவிருத்தி செய்வதால் தூத்துக்குடி துறைமுகத்தினுடைய ஏற்றுமதி இறக்குமதி பாதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கொளச்சல் துறைமுகமானது புயல் பகுதி, அந்தப்பகுதியில் அதிகமாக காற்று அடிக்கமுடியும். ஆனால் கடலில் ஆழம் வெகு பக்கத்தில் இருக்கிறது. ஆகவே ஜெட்டி அமைக்க முடிவு செய்து இருபது லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கவேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு ஜெட்டி கட்டுவதன் மூலம் தூத்துக்குடி எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : மத்திய அரசுக்கு டாலர் சம்பாதிக்கிற முறையில் அங்கு ஒரு மணல் கம்பெனி இருக்கிறது. அங்கிருந்து மணல் ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகவே, அந்தத் துறைமுகம் மிக முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமாகும். அதோடு அட்டாமிக் எனர்ஜி உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலை இருப்பதால் இந்தத் துறைமுகத்தின் முக்கியத்துவத்தை மத்திய அரசாங்கத்தினிடம் இந்த அரசாங்கம் வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : துறைமுகத்தைப் பெரிதாக்க இருபது லட்சம் டன் அளவில் ஏற்றுமதி–இறக்குமதி இருக்கவேண்டும். இங்கு இல்மனைட் மணல் எடுக்கப்படுகிறது என்பதும் எனக்குத் தெரியும், அதாவது மணவாளக்குறிச்சியில். அந்த மணலை இப்போது தூத்துக்குடிக்குப் பக்கத்தில் த்ரங்கதாரா கெமிக்கல்ஸுக்குக் கொண்டுபோய் அங்கு அதைத் தொழிற்சாலையில் பண்படுத்தி தூத்துக்குடி துறைமுகம் மூலம் இப்போது ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள்.

1973 மார்ச் 1]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கொளச்சல் துறைமுகம் தூத்துக்குடி துறைமுகத்திற்கு உதவிகாரமாக இருக்கிறது. அந்த மைனர் போர்ட்டை டெவலப் செய்ய எல்லாச் சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன. ஆதலால் அந்த அடிப்படையிலாவது இந்த இருபது லட்சம் ரூபாயை உடனடியாகச் செலவு செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது சரி, இது மைனர் போர்ட் பக்கத்திலுள்ள தூத்துக்குடி துறை முகத்திற்கு உதவியாகவிருக்கும். உடனடியாகச் செலவு செய்வது என்பது இல்லை. இப்போது இருபது லட்சம் ரூபாய் செலவில் பாலம் கட்டி கப்பல் பாலத்தோடு வந்து நிற்கிற அளவிற்கு ஒரு சிறிய பாலம் கட்டி மேம்படுத்து வது என்பது இப்போது திட்டத்தில் இருக்கிறது என்றுதான் சொன்னேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி துறை முகத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகவும், கொளச்சல் துறைமுகத் திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்றும் பரவலாகக் கூறப்படு கிறது. அந்த வதந்தியை மாற்றும் விதத்தில் கொளச்சல் துறைமுகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதைப் பெரியதொரு துறைமுகமாக ஆக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கருத்தை நீங்கள் சொல்லலாம். வதந்தி, பரவலாகக் கூறப்படுகிறது என்றெல்லாம் சொல்லக் கூடாது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: கொளச்சல் துறைமுகத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமோ அவ்வளவும் கொடுக்கப்படு கிறது. அதற்கு வேண்டிய அளவிற்குப் பாலம் கட்டவேண்டியது மிகவும் தேவை. அந்தப் பாலத்தை, அந்த ஜெட்டியை கட்ட இப்போது பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஆனல் தூத்துக்குடி துறைமுகம் என்பது ஒரு மேஜர் போர்ட் மத்திய அரசின்கீழ் வரக்கூடியது. 23, 24 கோடி ரூபாய் அளவில் செலவாகக்கூடிய பெரிய போர்ட்டாக இருக்கிறது. அங்கு, அதிகப் போக்குவரத்து இருக்க முடியும். சேதுசமுத்திரக் கால்வாய் வெட்டிய பிறகு அது இன்னும் பெரிதாக ஆகும். தூத்துக்குடி நகரம் சென்னை நகரத்திற்கு அடுத்தாற்போல் விளங்கும் என்று எதிர்பார்த்து, அதற்கான அடிப்படை வேலைகள் எல்லாம் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்